# 13 பாடசாலையில் முதல் நாள்

## செயற்பாடு 1

**படத்தை அவதானிப்போம். கீழ்வரும் சொற்களை வாசிப்போம். கலந்துரையாடுவோம்.**



| | | |
|---|---|---|
| முதல்நாள் | வகுப்பாசிரியர் | தேசிய கீதம் |
| சீருடை | புதிய மாணவர்கள் | மணி ஒலித்தது |
| ஆயத்தம் | வரவேற்பு | புன்சிரிப்பு |
| அறிவுரைகள் | விளையாட்டு | |
| வித விதமான உணவுகள் | | |

## செயற்பாடு 2 (34)

**ஆசிரியரின் உதவியுடன் கீழ்வரும் உரைப்பகுதியை அவதானமாகச் செவிமடுப்போம். வாசிப்போம்.**

அன்று திங்கட்கிழமை. அம்மா என்னை எழுப்பினார். நான் மகிழ்ச்சியுடன் எழுந்தேன். பல் துலக்கி, முகம் கழுவினேன். பாடசாலைச் சீருடையை அணிந்தேன். இறைவனை வணங்கினேன். அம்மாவும் அப்பாவும் என்னை வாரி அணைத்து முத்தமிட்டார்கள். நான் மகிழ்ச்சி அடைந்தேன். அப்பாவும் அம்மாவும் என்னை பாடசாலைக்கு அழைத்துச் சென்றார்கள்.



நாங்கள் பாடசாலையை அடைந்தோம். பாடசாலை மிக அழகாக அலங்கரித்து இருந்தது. என்னைப் போன்று பல மாணவர்கள் தமது பெற்றோருடன் வந்து இருந்தார்கள். சற்று நேரத்தில் தரம் 1 மாணவர்களை வரவேற்கும் விழா ஆரம்பமானது. தரம் 2 மாணவர்கள் அழகிய ரோஜா மலர்களை எங்களுக்கு வழங்கினார்கள்.

வரிசையாக எங்களை மண்டபத்திற்கு அழைத்துச் சென்றார்கள். எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. தரம் 2 மாணவர்கள் அழகாக நடனம் ஆடினார்கள். எங்களுக்கு பல வகையான உணவுகள் வழங்கினார்கள். அனைவரும் மகிழ்ச்சியாக உண்டோம்.

வகுப்பாசிரியர் எங்களை புன்சிரிப்போடு வரவேற்றார். வணக்கம் கூறினார். அன்புடன் பேசினார். எங்களை மைதானத்திற்கு அழைத்துச் சென்றார்.

புதிய நண்பர்களுடன் சேர்ந்து விளையாடினோம். 11.30 மணியளவில் மணி ஒலித்தது. எல்லோரும் தேசிய கீதம் பாடினார்கள். நாங்கள் வரிசையாக வெளியேறினோம். அம்மா ஓடிவந்து என்னைத் தூக்கிக் கொண்டார். நாங்கள் வீட்டுக்கு சென்றோம். அன்றைய நாள் என்னால் மறக்க முடியாது.

## சொல்அறிமுகம்

அதிகாலை - පාන්දරින්/ හිමිදිරියේ

வணங்கினேன் - වැන්දෙමි

முத்தம் - හාදුව

ஆயத்தமானேன் - සූදානම් වුණෙමි

வரவேற்றார் - පිළිගත්තේ ය

செவிமடுத்தோம் - සවන් දුන්නෙමු

கூறினார் - පැවසුවේ ය

சென்றோம் - ගියෙමු

சாப்பிட்டோம் - කෑවෙමු

## செயற்பாடு 3

34

**மீண்டும் செவிமடுப்போம். சரி (✓) பிழை (✗) இடுவோம்.**

1. அம்மா என்னை எழுப்பினார்.
2. அப்பா என்னை பாடசாலைக்கு அழைத்துச் சென்றார்.
3. அதிபர் எங்களுக்கு அறிவுரை வழங்கினார்.
4. ஆசிரியர் வணக்கம் கூறினார்.
5. விளையாட்டு மைதானத்தில் சாப்பிட்டோம்.

## செயற்பாடு 4

**படங்களுக்கு பொருத்தமான வாக்கியங்களை இனங்காண் போம். கூட்டினுள் எழுத்தை எழுதுவோம்.**

அ



ஆ



இ



ஈ



1. நான் பல் துலக்கினேன்.
2. நான் பாடசாலை செல்ல ஆயத்தம் ஆனேன்.
3. நான் படுக்கையிலிருந்து எழும்பினேன்.
4. நான் முகம் கழுவினேன்.

## செயற்பாடு 5

**வாக்கியங்களை ஒழுங்குபடுத்துவோம். எழுதுவோம்.**

| | |
|---|---|
| 1 | பாடசாலைச் சீருடை அணிந்தேன். |
| 2 | பல் துலக்கி, முகம் கழுவினேன். |
| 3 | அம்மா என்னை எழுப்பினார். |
| 4 | பாடசாலைக்குச் செல்ல ஆயத்தம் ஆனேன். |
| 5 | இறைவனை வணங்கினேன். |
| 6 | பெற்றோரை வணங்கினேன். |
| 7 | அன்று ஒரு திங்கட்கிழமை. |

## செயற்பாடு 6

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.**

1. பாடசாலைக்கு அழைத்துச் சென்றவர்கள் யாவர்?
2. தரம் 1 மாணவர்களை வரவேற்க வழங்கிய பூ எது?
3. வகுப்பாசிரியர் விளையாட எங்கே அழைத்துச் சென்றார்?
4. எத்தனை மணிக்கு மணி ஒலித்தது?

## செயற்பாடு 7

**கீழ்வரும் வாக்கியங்களை வாசிப்போம். ஒழுங்குபடுத்துவோம்.**

1. நாங்கள் அதில் பயணம் செய்தோம்.
2. கடைக்குச் சென்று புத்தகப்பை வாங்கினோம்.
3. ஒரு முச்சக்கரவண்டி வந்தது.
4. அன்று விடுமுறை நாள்.
5. நான் மாமாவுடன் கடைக்குப் போக ஆயத்தம் ஆனேன்.
6. நாங்கள் வீட்டுக்குத் திரும்பினோம்.
7. நீண்ட நேரம் பஸ் வரவில்லை.
8. எனக்குப் புத்தகப்பை ஒன்று வாங்க வேண்டும்.
9. பஸ் வரும்வரை காத்திருந்தோம்.

## செயற்பாடு 8

**செயற்பாடு 7 ஐ பின்வரும் சொற்களைக் கொண்டு ஒரு பந்தியாக மாற்றி எழுதுவோம்.**

| | |
|---|---|
| அப்பொழுது / அந்த நேரம் | - ඒ වෙලාවේ |
| பிறகு / பின் / பின்னர் | - පසු/ පසු ව |
| ஆகவே / எனவே / அதனால் / ஆகையால் | - එම නිසා |
| ஆனால் | - නමුත් |

# செவிமடுப்போம் உச்சரிப்போம்





35

வரவேற்பு

மகிழ்ச்சியுடன்

கழுவினேன்

இறைவன்

அழைத்து

ஒலித்தது

விழா

வணங்கினேன்



## දැන් මට පුළුවන්

| | ✓ලකුණු කරන්න | | |
|---|---|---|---|
| | ඉතා හොඳයි | හොඳයි | සාමාන්‍යයයි |
| 1. அப்பொழுது, ஆகவே, ஆனால், பிறகு වැනි නිපාත පද භාවිත කිරීම | | | |
| 2. සිද්ධියක් වචන කිහිපයකින් විස්තර කර පිළිවෙළට කියවීම, ලිවීම | | | |
| 3. වචනවලින් ලියූ සිද්ධියක් ඡේදයක් වශයෙන් ලියා ගැනීම | | | |
| 4. මෙම පාඩමේ යෙදෙන වචන සවන් දී නිවැරදි ව උච්චාරණය කිරීම | | | |